# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

**அசல் வழக்கு எண்.243/2004**

பெயர்: **வரதன் (எ) வரதராஜன்** நாள்: 11.07.2025

பி.வா.சா.8 – பிரதிவாதிகள் தரப்பு முதல் விசாரணையின் தொடர்ச்சி

பி.வா.சா.8 – வரதன் (எ) வரதராஜன் - சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணையின் தொடர்ச்சி

முதல் விசாரணையின் தொடர்ச்சி நேரம் 03:50

பதிவு செய்யப்பட்ட அசல் உயில் ஆவணத்தை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் எனது தகப்பனார் ஒப்படைத்த பிறகு என்ன நடந்தது என்றால், ஒரு வாரத்திற்கு பின்பு குள்ளம்பட்டியைச் சேர்ந்த முத்துநாடார் என்பவர் என்னுடைய தகப்பனாரிடமிருந்து அசல் ஆவணத்தின் ஜெராக்ஸ் நகலை வாங்கி சென்றார். அதன்பிறகு இரண்டு நாட்கள் கழித்து குள்ளம்பட்டியைச் சேர்ந்த P.R என்கிற ராமலிங்கம் என்பவர் முன்னாள் பஞ்சாயத்து தலைவர் மேற்படி அசல் ஆவணத்தின் ஜெராக்ஸ் நகலை எனது தகப்பனாரிடமிருந்து வாங்கி சென்றார். (இந்த கேள்விகள் சம்மந்தமாக சாட்சி சம்மனில் குறிப்பிடவில்லை என வாதி தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டது.) சாட்சி பின்னிட்டு 2006-ம் ஆண்டில் மேற்படி உயிலை எழுதிய ரத்தினசாமி ஊரான எல்லைப்பாளையத்தை சேர்ந்த கன்னுசாமி, மதியழகன், பொன்னுசாமி ஆகியோர்கள் எனது தகப்பனாரிடமிருந்து அசல் ஆவணத்தின் ஜெராக்ஸ் நகலை வாங்கி சென்றார். (இந்த கேள்விகள் சம்மந்தமாக சாட்சி சம்மனில் குறிப்பிடவில்லை என வாதி தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டது.)

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2025.07.11 16:35:16 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.